2017 ஜுலை 4]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *வினா வரிசை எண் 128, மாண்புமிகு உறுப்பினர் திரு. வெ. கணேசன், மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

128—

பால் குளிரூட்டும் நிலையம்

***5518—திரு. வெ. கணேசன்:**

மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திட்டக்குடி தொகுதி, மங்களூரில் பால் குளிரூட்டும் நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி, பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) திட்டக்குடி தொகுதி, மங்களூரில் பால் குளிரூட்டும் நிலையம் அமைக்கப்படுமா என்று திட்டக்குடி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. வெ. கணேசன் அவர்கள் கேள்வி எழுப்பியிருக்கின்றார்கள்.

திட்டக்குடி தொகுதி, மங்களூரில் பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லாததால் தற்பொழுது அதை அமைக்கும் செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தங்கள் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வெ. கணேசன் அவர்கள்.*

திரு. வெ. கணேசன்: *தமிழக அரசியல் வரலாற்றில், குளித்தலையில் தொடங்கி திருவாரூர் வரை 13 முறை சட்டமன்றத் தேர்தலில் போட்டியிட்டு, 13 முறையும் வெற்றி பெற்ற தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு கழக செயல் தலைவர்,*

சட்டமன்றத்தினுடைய எதிர்க்கட்சித் தலைவர், எங்கள் ஆருயிர் அண்ணன் தளபதி அவர்களையும் வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) எனது திட்டக்குடி சட்டமன்றத் தொகுதியிலுள்ள மங்களூர் ஒன்றியம், நல்லூர் ஒன்றியத்தில்தான் அதிகமான அளவிற்கு பால் உற்பத்தி செய்யப்படுகின்றது. மங்களூர் ஒன்றியத்தில் வடபாதி ஊராட்சியில் ஒரு மினி பால் குளிரூட்டும் நிலையமும், மங்களூர் ஊராட்சியில் ஒரு மினி பால் குளிரூட்டும் நிலையமும், அதைப்போல் ஆவினன்குடி ஊராட்சியில் ஒரு மினி பால் குளிரூட்டும் நிலையமும் உள்ளது. ஓர் ஒன்றியத்தில் மட்டுமே 3 மினி பால் குளிரூட்டும் நிலையங்கள் உள்ளன. ஒவ்வொரு மினி பால் குளிரூட்டும் நிலையத்திலும் 5,000 லிட்டர் வீதம் 3 நிலையங்களில் 15 ஆயிரம் லிட்டர் பாலை பதப்படுத்தக்கூடிய ஒரு நிலை உள்ளது. ஆனால், 9 சட்டமன்றத் தொகுதி உள்ள கடலூர் மாவட்டத்தில், சேத்தியாத்தோப்பில் மட்டும்தான் ஒரு பெரிய பால் குளிரூட்டும் நிலையம் இருக்கின்றது. ஓர் ஒன்றியத்தில் மட்டும் மூன்று இடங்களில் மினி பால் குளிரூட்டும் நிலையம் இருக்கின்றபோது, ஏன் மங்களூர் ஒன்றியத்தில் ஒரு பெரிய பால் குளிரூட்டும் நிலையத்தை உருவாக்கக் கூடாது என்பதை இந்த நேரத்திலே நான் கேட்க விரும்புகிறேன். ஆகவே, திட்டக்குடி சட்டமன்றத் தொகுதியிலுள்ள மங்களூரிலோ அல்லது சிறுபாக்கத்திலோ ஒரு பெரிய பால் குளிரூட்டும் நிலையத்தை அமைக்க இந்த அரசு நடவடிக்கை எடுக்குமா என தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 11–15

மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடலூர் மாவட்டம், திட்டக்குடி தொகுதியில் மொத்தம் 38 பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. இந்த 38 கூட்டுறவுச் சங்கங்களிலிருந்து நாளொன்றிற்கு சராசரியாக 17 ஆயிரத்து 500 லிட்டர் பால் கொள்முதல் செய்யப்படுகிறது. திட்டக்குடி தொகுதியில் மங்களூர் மற்றும் வடபாதி ஆகிய இரு இடங்களில் மொத்த பால் குளிர்விப்பான்கள் (BMC) செயல்பட்டு*

2017 ஜூலை 4]

வருகின்றன. இத்தொகுதியில் மங்களூர் ஒன்றிய தொடக்க பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்தின்மூலம் நாளொன்றுக்கு 14,500 லிட்டர் பால் கொள்முதல் செய்யப்பட்டு, அவற்றில் 3,500 லிட்டர் பால் உள்ளூர் விற்பனைக்குப்போக, மீதமுள்ள 11,000 லிட்டர் பால் அப்பகுதியில் அமைந்துள்ள மங்களூர் மற்றும் வடபாதி ஆகிய இடங்களில் உள்ள மொத்த பால் குளிர்விப்பான்களுக்கு அனுப்பப்பட்டு, அங்கு குளிர்விப்பு செய்த பின்பு, பால் பண்ணைகளுக்கு அனுப்பப்பட்டு வருகிறது. திட்டக்குடி தொகுதியின் இதர பகுதிகளில் கொள்முதல் செய்யப்படும் சுமார் 3,000 லிட்டர் பால் வழித்தடங்களில் சேகரிக்கப்பட்ட பின்னர், சின்ன சேலம் பால் குளிரூட்டும் நிலையத்திற்கு அனுப்பப்படுகிறது. இந்நிலையில், மங்களூர் பகுதியில் கொள்முதல் செய்யப்படும் பால் அனைத்தும் அப்பகுதியிலே அமைந்துள்ள மொத்த பால் குளிர்விப்பான்களில் குளிர்விக்கப்படும் வசதியுள்ளதால், மங்களூரில் தனியே ஒரு பால் குளிரூட்டும் நிலையம் (chilling centre) அமைக்க வேண்டிய அவசியம் இல்லை. இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை ஏற்று, அங்கே ஒரு BMC–ஐ வேண்டுமானால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆலோசனையைப் பெற்று அமைக்கலாம் என்பதைத் தங்கள் வாயிலாக தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வெ. கணேசன் அவர்கள்.

திரு. வெ. கணேசன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடலூர் மாவட்டத்தில் விவசாயிகள் அதிகமாக உள்ளனர். தமிழ்நாட்டில், விவசாயத்திற்கு அடுத்தபடியாக பால் உற்பத்தி செய்வதென்பது ஒரு மிகப் பெரிய தொழிலாக இருக்கின்றது. திட்டக்குடி தொகுதியில் மட்டும் 64 பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன. அவற்றில் 5 சங்கங்களுக்கு மட்டும்தான் இப்போது கட்டடங்கள் உள்ளன. மீதமுள்ள பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு கட்டடங்களைக் கட்டித் தர வேண்டுமென இந்த அரசை நான் கேட்டுக்கொள்கிறேன்.

பால் எடுத்துச் செல்ல வசதியாக 40 litre silver cans–ஐ பால் உற்பத்தியாளர் சங்கங்களுக்கு இலவசமாக வழங்க வேண்டும். கொள்முதல் செய்யப்பட்ட பாலுக்கு, பத்து நாட்களுக்கு ஒரு முறை பணம் கொடுக்க வேண்டும். இப்போது, தமிழ்நாட்டில்

$1\frac{1}{2}$ மாத காலமாக பால் உற்பத்தியாளர் சங்கங்களுக்குப் பணம் கொடுக்கப்படாமல் நிலுவையில் இருக்கின்றது. ஆகவே, $1\frac{1}{2}$ மாதக்காலமாக பணம் வழங்கப்படாமல் உள்ள பால் உற்பத்தியாளர் சங்கங்களுக்கு நிலுவைத் தொகையை உடனடியாகக் கொடுப்பதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன். குஜராத் மாநிலத்தில் பார்த்தீர்கள் என்றால் . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள், பதில் சொல்லுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. வெ. கணேசன் போதும், நீங்கள் கேள்வி கேட்டுவிட்டீர்கள்.

மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு திட்டக்குடி சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் சொல்லிய கருத்துகள்படி, கடலூர் மாவட்டம், விழுப்புரம் மாவட்டத்தைச் சேர்ந்ததுதான், ஒரு பால் பண்ணை. அங்கே chilling centres தேவையான அளவில் இருக்கின்றன; BMC–யும் தேவையான அளவில் இருக்கின்றன. கடலூர் மாவட்டத்தில் பால் உற்பத்தியாளர்களுக்குப் பணம் சரியாக வழங்கப்படவில்லை என்ற தகவலைச் சொன்னார். இதுபோன்ற தகவல் எனது கவனத்திற்கும், துறையின் கவனத்திற்கும் வரவில்லை. அதை விசாரித்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று உரிய முறையில் பால் உற்பத்தியாளர்களுக்கு பணப் பட்டுவாடா செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா வரிசை எண் 129, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. குமரகுரு, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

129—

பேருந்து வசதி

***10613—திரு. இரா. குமரகுரு:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—